# சுப்ரபாரதிமணியனின் எழுத்துலகம்

*து. ராஜேஸ்வரி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை ஆய்வுமையம்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5202

## முன்னுரை

உயர்திரு. ஆர்.பி. சுப்ரமணியன் அவர்கள் அக்டோபர் இருபத்தைந்தாம் தேதி, 1955இல் திருப்பூரில் பிறந்தவர் ஆவார். தமிழகத் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவராக இன்றுவரை இருக்கின்றார். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என அனைத்துத் தளங்களிலும் முப்பது வருடங்களாகக் கால் பதித்து எழுதி வரும் எழுத்தாளர். இவர் இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் வழங்கிய கதாவிருது பெற்ற சிறப்பாளர். மேலும் தமிழக அரசின் சிறந்த நாவல் ஆசிரியர் விருது உட்பட பல்வேறு விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர். இத்தகு பலவிதச் சிறப்புக்களையுடைய மணியனின் எழுத்துக்கள் குறித்து பேசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## படைப்புகள்

சிறுகதைப் படைப்பில் தன்னிகரற்று விளங்கியவர் சுப்ரபாரதிமணியன். இவர் பதினொரு (11) சிறுகதைத் தொகுப்புகளை இதுவரை வெளி யிட்டுள்ளார். இவரின் முதல் சிறுகதைத் தொகுப்பு 1987இல் வெளி வந்த அப்பா என்னும் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து 1995இல் அருள்இசை, 1997இல் ஆழம், 1998இல் வழித்துணைகள், 2004இல் தொலைந்து போன கோப்புகள், 2007இல் ஓலைக்கீற்று, 2009இல் கூண்டும் வெளி யும், 2011இல் சுப்ரபாரதிமணியனின் கதைகள், 2011இல் வேட்டை (உயிர்மை) மற்றும் மாறுதடம் என சிறுகதைகளைப் படைத்து வெளி யிட்டுள்ளார்.

இவரின் கவிதைத் தொகுப்பாக ஒரே ஒரு நூல் வெளி வந்துள்ளது. இன்றைய அத்தியவாசியமும் அவசியமுமான நீரினை மையமிட்டு படைத்த “நீர்த்துளி” (2011) என்பதை கவிதைத்தொகுதியாகும்.

## கட்டுரைகள்

அதிகமான பயணக்கட்டுரைகள் வெளி யிட்டுள்ளார். (1999இல் பயணக் கட்டுரைகள் - மண் புதிது - இது ஐரோப்பா, இங்கிலாந்து பயண அனுபவம் குறித்து பேசுவதாகும்) அடுத்த கட்டுரையும் நீரினை மையமிட்டே எழுதப் பெற்றதாகும்.

“தண்ணீர்யுத்தம்” (2008 உயிர்மை) சுற்றுச்சூழலியல் சார்ந்த நிகழ்வுகளையும், நீரின் அத்தியாவசிய தேவையினையும் இக்கட்டுரையில் பேசியுள்ளார். 2009இல் படைப்பு மனம், 2010இல் மனக்குகை ஓவியங்கள், 2014இல் மேக வெடிப்பு, 2014இல் சூழல் அறம் 2015இல் மூன்றாம் உலகப்போர் ஆகியன இவரால் படைத்தளிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்புகளாகும்.

இதுதவிர, சில திரைப்படக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். 2008இல் திரைவெளி என்னும் கட்டுரையும் 2010இல் நாளை மற்றொரு நாளல்ல எனும் திரைப்படம் சார்ந்த கட்டுரையும் எழுதியுள்ளார்.

### நூல்கள்

நாவல் உலகத்தில் தனித்த இடத்தை பெற்றுள்ளார். குறுநாவல்களும், நாவல்களும் அதிகமாகப் படைத்துள்ளார். சமூகப் பார்வையுடனும், அதித அக்கறையுடனும் நாவல் எழுதும் வல்லமை மிக்கவர். குறுநாவல்கள் வரிசையில் 1988இல் நகரம், 2005இல் காற்றில் அலையும் சிறகு, 2012இல் வேறிடம் என மூன்று குறுநாவல்களை எழுதியுள்ளார்.

1987இல் மற்றும் சிலர் என்னும் முதல் நாவலை வெளி யிட்டுள்ளார். 1990இல் சுடுமணல் (கட்டுரை வடிவில்) எழுதப்பட்ட நாவல் இது. இந்நாவல் மலையாள மொழியிலும் வெளியாகி உள்ளது. அடுத்தாக 1998இல் வெளி வந்த சாயத்திரை தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான பரிசை பெற்ற நாவலாகும். 2003இல் பிணங்களின் முகங்கள் என்னும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளி யானது. 2005இல் சமையலறைக் கலயங்கள், 2006இல் தேநீர் இடைவேளை, 2007இல் ஓடும் நதி, 2011இல் அறிவிப்பு, 2012இல் மாறு, 2011ல் நீர்த்துளி, தறிநாடா, சப்பரம், புத்துமண் போன்ற உயிரோட்டமான நாவல்களையும் படைத்துள்ளார்.

### தொகுப்பு நூல்கள்

பல தொகுப்பு நூல்களையும் சுப்ரபாரதிமணியன் அவர்கள் எழுதியுள்ளார். 2010இல் அசோகமித்ரன் 77 என்னும் நூலினை வெளி யிட்டுள்ளார். அசோக மித்ரன் குறித்த செய்திகளை இக்கட்டுரைகள் பேசுகின்றது. தமிழ் மொழிக்கு நாடில்லை என்னும் நூலும் வெளி வந்துள்ளது. முத்து லிங்கத்தின் மூன்று உலகங்கள் என்னும் நூலும், சி.சு.செல்லப்பா எழுத்துக்காரன், நோபல் பரிசு பெற்றவர்களின் கதைகள், படைப்பும் பகிர்வும், தற்கால மலையாளக் கவிதைகள் எனப் பல தொகுப்பு நூல்களை எழுதியுள்ளார்.

### குறும்படங்கள்

சுப்ரபாரதிமணியன் அவர்கள் பல குறும் படங்களையும் தயாரித்துள்ளார். 2005இல் சோத்துப்பொட்டலம், 2004இல் திருவிழா, 2009இல் சுமங்கலி போன்ற படங்களைப் படைத்து வெளி யிட்டுள்ளர்.

இவர் இயற்றிய நாடகமாக மணல்வீடு (2005) அறியப்படுகின்றது. இது சிறந்த நாடகமாகவும் விளங்கி வருகின்றது.

### சுப்ரபாரதியின் எழுத்துலகம்

இவருடைய எழுத்துக்கள் அனைத்தும் வர்க்கப்போராட்டத்தையே அதிகமாகப் பேசுவன ஆகும். மக்கள் எழுத்தாளர் என்று இவரைக் கருதலாம். தொழிலாளர்களை மையமிட்டே இவரின் எழுத்துகள் புனையப்பட்டுள்ளன. நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கையினை அப்படியே வெளிப்படுத்தும் நூலாக அமைத்துள்ளார்.

அதேபோல் சப்பரம் நாவலில் சாதியமும், தொழிலும் பேசப்பட்டுள்ளது. திருப்பூர் நெசவாளர்களின் சமூகம் குறித்துப் பேசியுள்ளார். குயவர்கள், வண்ணார், நாவிதர், வலையர் என அனைத்து மக்கள் குறித்து இந்நாவலில் பேசப்பட்டுள்ளது.

பொதுநிலையில், நெசவாளர் சமூகத்தின் வறுமை, குடியால் அழியும் குடும்பம், முதிர்கன்னிப்பெண்ணின் அவலநிலை எனச் சித்தரித்துள்ளார். புத்துமண் என்னும் நாவலில் சமூக ஆர்வலர் போராளியை மையமாகக் கொண்டு கதை அமைப்பு பின்னப்பட்டுள்ளது. இந்நாவலில் தொழிலாளர்கள் சுரண்டல், சுற்றுச்சூழல் சுரண்டல், சாதிய ஆதிக்க வெறியலின் அட்டகாசம், வறண்டுபோன மனிதாபிமானம் போன்றவை பேசப்பட்டுள்ளது. அரசாள்வோன், மக்கள் அலையும் அலைச்சல், தவிப்பு போன்ற அவலங்களையும் இந்நாவல் விவரிக்கிறது. குறுக்குவழியில் பணம் தேடும் இயல்பு, கடன் சுமை என சமூகச் சீர்கோடுகளையும் விவரித்துள்ளார்.

சுற்றுச்சூழல் சீர்கேட்டின் முடிவற்ற தன்மை, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல், தொழிற்சாலைகளில் மூர்க்கத்தனம், மூட நம்பிக்கைகள், அரசு அதிகாரிகளின் அத்துமீறல்கள் என சமூக அவலங்களைத் தோலுரித்துள்ளார் ஆசிரியர்.

**நிறைவாக**

மக்களுக்காக எழுதிவரும் ஒரு போராளி என்றே சுப்ரபாரதிமணியன் அவர்களைக் கூறலாம். இனிய தேசத்தின் ஈனமுனகல் சத்தத்தினையே தன் காதுகளில் ஏற்றி, எழுத்துக்களில் வெளியிட்டுள்ளார். அவருக்கே உரித்தான நடையில் புதிய பாணியில் எழுதி சுட்டிக்காட்டி எழுதிவருகிறார். சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும், அவசரத்தையும் தன் நாவலில் நறுக் எனக் காட்டியுள்ள சமூகநலவாதி இவர். தொழிலாளர் போராட்டங்களைப் பற்றி எழுதும் போது துணிச்சலான கருத்துக் களைப் பதிவிட்டு, போராட்டக் களத் தினை முன்னெடுத்துள்ளார். இவ்வகையில் இவரின் எழுத்துக்கள் வெற்றிய அடைந் துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது.